بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *20/10/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ பத்ர் போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**
**✪ மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர் சூழலைக் கருத்தில் கொண்டு சிறப்பு துஆக்களின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا

الضَّآلِّیۡنَ ۝٧

பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றின் ஆதாரத்தின் அடிப்படையில் பத்ர் போர் முடிந்த உடன் நடைபெற்ற சில நிகழ்வுகளை இன்றும் கூறுவேன்.

பெருமானார் [ஸல்] அவர்களின் மருமகன் அபுல் ஆஸ் [ரலி] அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறிப்புகள் வரலாற்றில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது, பெருமானார் [ஸல்] அவர்கள் ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா [ரலி] அவர்களின் தலைமையில் **70** சஹாபிகளுடன் ஈஸ் என்கின்ற பகுதிக்கு ஒரு குழுவை அனுப்பினார்கள். ஈஸ் எனும் இடம் மதீனாவில் இருந்து நான்கு நாட்கள் பயண தொலைவில் உள்ளது. இங்கு நாட்களுக்கான தொலைவு என்று கூறப்படும் பொழுது வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்; ஒரு நாளின் தொலைவு **12** மைல் தூரமாகும். இந்த அடிப்படையில் மேற்கூறப்பட்ட இடம் **48** மைல் தூரத்தில் உள்ளது. இந்தப் போரினுடைய விபரம் பின்வருமாறு கூறப்படுகின்றது. அதாவது, சிரியா நாட்டிலிருந்து மக்கத்து குரைஷிகளுடைய ஒரு வியாபாரக் குழு வருகின்றது. முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும்; போர் செய்ய வேண்டும் என்பதே அந்தக் குழுவின் நோக்கம் ஆகும் என்ற செய்தி பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. எவ்வாறு இருப்பினும் அவர்கள் அதைத் தடுத்து நிறுத்தினார்கள். மேலும் அதனுடைய அனைத்துப் பொருட்களையும் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்டார்கள். சில கைதிகளையும் பிடித்தார்கள். அந்தக் கைதிகளில் அபுல் ஆஸ் (ரலி) அவர்களும் கைதானார்.

ஸீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஈஸ் பகுதிக்கு அனுப்பப்பட்ட படையினால் பிடிக்கப்பட்ட கைதிகளில் பெருமானார் (ஸல்) அவர்களின் மருமகன் அபுல் ஆஸ் அவர்களும் இருந்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நெருங்கிய உறவினராகவும் இருந்தார்கள். அப்போது வரை இணைவைப்பில்தான் இருந்தார்கள். அபுல் ஆஸ் அவர்கள் ஏதோ ஒரு வழிவகையின் மூலமாக, தாம் கைது செய்யப்பட்டுள்ள செய்தியை ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கு அனுப்பினார்கள்......... பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் ஸஹாபிகள் சுபுஹ் தொழுகையில் இருக்கும் பொழுது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் வீட்டினுள் இருந்தவாறு உரத்த குரலில், முஸ்லிம்களே! நான் அபுல் ஆஸ்ஸுக்கு அடைக்கலம் தந்துள்ளேன் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுகை முடிந்த உடன் சஹாபிகளைப் பார்த்து ஸைனப் கூறியதை நீங்கள் அனைவரும் கேட்டு விட்டீர்களா! இறைவன் மீது ஆணையாக! எனக்கு இது குறித்து தெரியாது என்றார்கள். இருப்பினும், முஃமின்களுடைய ஜமாஅத்தில் யாராவது நிராகரிப்பவருக்கு அடைக்கலம் தந்தார்கள் என்றால் அதனை கண்ணியப்படுத்துவது கட்டாயமாக ஆகிவிட்டது என்றார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களைப் பார்த்து, நீங்கள் எவருக்கு அடைக்கலம் தந்தீர்களோ அவருக்கு நாங்களும் அடைக்கலம் தருகின்றோம் என்று கூறியவாறு அபுல் ஆஸ் அவர்களின் பொருட்களை அவர்களுக்குத் திருப்பி கொடுத்து விட்டார்கள். அபுல் ஆஸ் அவர்களை உபசரிக்குமாறு ஸைனப் (ரலி) அவர்களிடம் கூறிவிட்டு, அவருடன் தனிமையில் சந்திக்க வேண்டாம் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சில நாட்கள் மதீனாவில் தங்கியிருந்த பிறகு அபுல் ஆஸ் மக்காவிற்குத் திரும்பிச் சென்று விட்டார். அவர்கள் விரைவாக தம்முடைய கொடுக்கல் வாங்கல் போன்றவற்றை முடித்துவிட்டு பெருமானார் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் ஆஜராகி முஸ்லிம் ஆகி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கு எவ்வித புது நிக்காஹ்வும் செய்யாமல் அவர்களை அபுல் ஆஸ் அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்கள்.

ஒரு பெண் தன்னுடைய கணவர் நிராகரிப்பாளராக இருப்பதன் காரணத்தினால் பிரிந்து விடுகிறாள் என்றால், பிறகு கணவர் ஈமான் கொள்ளும் பட்சத்தில் மறுபடியும் நிக்காஹ் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்கின்ற மார்க்க தீர்ப்பும் இதிலிருந்து கிடைக்கிறது.

தமது கணவர் இஸ்லாம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் நீண்ட நாள் வாழவில்லை. ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி), ஹஸ்ரத் சௌதா (ரலி), ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி), ஹஸ்ரத் உம்மு அதியா (ரலி) ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களைக் குளிப்பாட்டினார்கள். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு அபுல் ஆஸ் (ரலி) அவர்களும் நீண்ட காலம் வாழவில்லை. ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள்.

சவீக் போர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு துல்ஹஜ்ஜா மாதத்தில் நடைபெற்றது. சவீக் போருக்கான காரணமாக சொல்லப்படுவதென்னவென்றால், இணை வைப்பவர்கள் (முஸ்லிம்களிடம்) தோல்வியுற்று, கவலையுடன் மக்காவுக்குத் திரும்பிச் சென்றனர். எதுவரை ஹஸ்ரத் ரஸூல் அவர்கள் (ஸல்) மற்றும் அன்னாருடைய சஹாபிகளை பத்ர் போரின் தோல்விக்குப் பழி வாங்குவதில்லையோ அதுவரை தாம் குளிப்பதில்லை என்று அபூசுஃப்யான் ஓர் உறுதியான சபதம் எடுத்துகொண்டார்.

அறிவிப்பின் அடிப்படையில், அபூசுஃப்யான் அவர்கள் 200 சவாரிகளுடன் தமது சபதத்தை முழுமைப்படுத்துவதற்காக புறப்பட்டார் என்று வருகிறது. இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் 40 சவாரிகளுடன் புறப்பட்டதாக கூறப்படுகிறது. பனூ நசீர் கோத்திரத்தைச் சார்ந்த ஹை பின் அக்தப் என்பவரிடம் உதவி கேட்டு சென்றார். அவர் மறுத்துவிட்டார். பிறகு அபூசுஃப்யான் அங்கிருந்து சலாம் பின் முஷ்கம் என்பவனிடம் சென்றார். அவன் முஸ்லிம்களின் இரகசிய விஷயங்களைக் கூறினான். மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய தினசரி பணிகள் என்ன என்பது பற்றி கூறினான். பிறகு அபூசுஃப்யான் குறைஷிகளுடைய சில நபர்களை மதீனாவில் இருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள பேரித்த மரங்கள் நிறைந்த பாலைவனச் சோலையான அரீஸ் எனும் இடத்திற்கு அனுப்பினார். அவர்கள் அங்கு பல மரங்களை எரித்து விட்டனர். மேலும் ஓர் அன்ஸாரி முஸ்லிமைக் கொன்று விட்டனர். அபூசுஃப்யான் அவர்கள் இந்த வெற்றியைத் தம் சபதம் நிறைவேறியதாக எண்ணி தம்முடைய படையை அழைத்துக்கொண்டு மக்காவுக்கு கிளம்பினார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அபூசுஃப்யானின் தாக்குதல் தொடர்பாக செய்தி கிடைத்ததும் 200 சஹாபிகளுடன் அவர்களைத் தேடிச் சென்றார்கள். எதுவரை என்றால் கர்கரத்துல் குத்ர் எனும் இடத்தை அடைந்தார்கள். அபூசுஃப்யான் மற்றும் அவருடைய படை தப்பி ஓடியவாறு சத்துமாவின் பைகளை எறிந்து கொண்டே சென்றது. முஸ்லிம்கள் அதை எடுத்துக் கொண்டே சென்றனர். ஆகையால் இந்தப் போருக்கான பெயர் சவீக் (சத்துமாவு) போர் என்றானது. அபூசுஃப்யான் மற்றும் அவர்களின் படை தப்பித்து ஓடி விட்டது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மதீனாவிற்குத் திரும்பி வந்துவிட்டார்கள். சஹாபிகள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் இது போரில் அடங்குமா என்று வினவியபோது, இதுவும் போர்தான் என்றார்கள்.

சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் முதல் ஈதுல் அல்ஹா தொடர்பாக எழுதுகின்றார்கள்:

இதே வருடம் துல் ஹஜ்ஜா மாதத்தில் இரண்டாவது இஸ்லாமிய பெருநாளான ஈதுல் அல்ஹா ஆரம்பமானது. இது துல்ஹஜ்ஜா மாதத்தின் பத்தாம் தேதி முழு இஸ்லாமிய உலகிலும் கொண்டாடப்படுகிறது. இந்தப் பெருநாளில் ஒவ்வொரு வசதி படைத்த முஸ்லிமும் தம் சார்பாக ஏதேனும் ஒரு கால்நடையை குர்பானி கொடுத்து அதனுடைய இறைச்சியை அன்பர்கள், உறவினர்கள், நண்பர்கள், அண்டை அயலார் மற்றும் பிற மக்களுக்கு விநியோகம் செய்வதோடு தாமும் உண்ணலாம். ஆகையால் ஈதுல் அல்ஹாவின் நாளிலும் அதற்குப் பிறகுள்ள இரண்டு நாட்கள் வரையும் அனைத்து இஸ்லாமிய உலகிலும் கோடிக்கணக்கான கால்நடைகள் இறை வழியில் குர்பானி

கொடுக்கப்படுகின்றன. மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) மற்றும் ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) ஆகியோர் முன்னெடுத்த மாபெரும் தியாகத்தை உயிரூட்டுகின்றனர். இதனுடைய மிகச்சிறந்த உதாரணம் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை ஆகும். தங்களுடைய தலைவர் மற்றும் எஜமானரின் வழியில் தங்களுடைய உயிர், செல்வம் மற்றும் அனைத்துப் பொருட்களையும் தியாகம் செய்வதற்காக தயாராக இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கவனமூட்டப்பட்டுள்ளது. இந்த ஈதும் ஈதுல் ஃபித்ரைப் போன்று ஒரு மாபெரும் இஸ்லாமிய இறை வணக்கத்தை முழுமைப்படுத்தியதன் காரணத்தினால் கொண்டாடப்படுகின்றது. அந்த இறைவணக்கம் ஹஜ் ஆகும்.

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணமும் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என இருவரும் நபி (ஸல்) அவர்களின் முன்பு ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களைத் திருமணம் முடிப்பதற்கான விண்ணப்பத்தை வைத்தார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்து விட்டார்கள். அவர்கள் எந்த பதிலும் தரவில்லை. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றேன். ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களை எனக்கு மணமுடித்து தருவீர்களா என விண்ணப்பம் வைத்தேன். உம்மிடம் மஹருக்காக ஏதாவது இருக்கின்றதா என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். என்னிடம் குதிரையும் என்னுடைய கவசமும் இருக்கின்றது என்று நான் பதில் கூறினேன். குதிரை உமக்குத் தேவைப்படும். கவசத்தை விற்பனை செய்து விடுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகையால் நான் என்னுடைய கவசத்தை **480** திர்ஹமுக்கு விற்பனை செய்து ஹக் மஹருக்கான ஏற்பாடு செய்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அதிலிருந்து ஒரு கையளவு எடுத்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் தந்தவாறு, இதிலிருந்து சிறிது நறுமணம் வாங்குங்கள் என்று கூறியவாறு, ஹஸ்ரத் பாத்திமா (ரலி) அவர்களுக்காக சீர்வரிசை தயார் செய்யங்கள் என்று சில மக்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். இந்த அடிப்படையில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்காக ஒரு கட்டில், பேரிச்ச ஓலைகள் நிறைக்கப்பட்ட தோலாலான ஒரு தலையணை தயார் செய்தனர்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் இந்தத் திருமண பந்தம் ஏற்படுத்தும் பொழுது, எனது இறைவன் எனக்கு இவ்வாறு செய்யுமாறு கட்டளை வழங்கினான் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வழி அனுப்பியதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பாத்திரத்தில் உளூ செய்தார்கள். பிறகு அந்த நீரை ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோர் மீது தெளித்தார்கள்.

اَللّٰهُمَّ بَارِكْ فِيْهِمَا وَبَارِكْ عَلَيْهِمَا وَبَارِكْ لَهُمَا نَسْلَهُمَا

“அல்லாஹ்வே இந்த இருவருக்கும் இடையில் உள்ள பந்தத்தில் அருளைப் பொழிவாயாக! மேலும் மற்றவர்களுடனான இவர்களின் பந்தத்திலும் அருளை ஏற்படுத்துவாயாக! இவர்களுடைய சந்ததிகளிலும் அருளை ஏற்படுத்துவாயாக!”

திருமணம் முடிக்கும் ஜோடிகளுக்காகவும் அவர்களுடைய தாய் தந்தை இந்த துஆவை செய்து வர வேண்டும். இன்றைய காலத்தில் திருமணத்திற்குப் பிறகு பையன், பெண் இருவருக்கிடையில் பிரச்சனைகள் உருவாகின்றன. இந்த எண்ணிக்கையும் அதிகமாகி கொண்டே இருக்கின்றது. இதனுடைய காரணம், உலக எதிர்பார்ப்புகள் ஆகும். அது அதிகமாகி கொண்டே செல்கிறது. ஒருவேளை மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள் என்றால், இந்த துஆவை செய்தீர்கள் என்றால், பெற்றோர்கள் தங்களுடைய நிலைகளை இவ்வாறு ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் திருமண பந்தங்களும் நிலைத்து நிற்கும்.

திருமணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் அன்ஸாரி (ரலி) என்ற பற்றுள்ள ஒரு சஹாபி தன்னுடைய ஒரு வீட்டை காலி செய்து, ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோர் அங்கு வாழ அதை சமர்ப்பித்தார்கள்.

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், உரலில் மாவு அரைப்பதன் காரணத்தினால் கைகளில் வலி உள்ளது என்று கூறி பணியாளருக்கான விண்ணப்பத்தை வைத்தார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் பாத்திமா (ரலி) ஆகியோரிடம், நீங்கள் உங்களுடைய படுக்கையில் படுக்கும் பொழுது 34 முறை அல்லாஹு அக்பர் என்றும் 33 முறை சுப்ஹானல்லாஹ் என்றும் 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும் கூறுங்கள். இது உங்களுக்கு பணியாளரை விடச் சிறந்ததாகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பணியாளரை ஏற்பாடு செய்வது கடினம் இல்லை! ஆனால் எதிர்காலத்தில் வருகின்ற மக்கள் இதிலிருந்து ஏதாவது ஒரு விளக்கம் எடுத்து விடலாம். மன்னர்கள் (பைத்துல் மாலின்) இந்த செல்வத்தை ஆகுமானதாக ஆக்கிக் கொள்ளலாம். ஆகவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருமானார் (ஸல்) அவர்கள், தம்மிடம் விநியோகத்திற்காக கொண்டு வரப்படும் ஆண் அடிமைகள் மற்றும் பெண் அடிமைகள் ஆகியோரில் இருந்து எவரையும் வழங்கவில்லை.

மீதம் இன்ஷா அல்லாஹ் வரும் காலத்தில் எடுத்துக் கூறுவேன்!

தற்பொழுது நான் மறுபடியும் உலகத்தின் சூழலின் காரணமாக துஆவிற்காக கூற விரும்புகின்றேன். தற்பொழுது மேற்கத்திய உலகம் குறிப்பாக அமெரிக்காவின் சில பத்திரிகைகளில் எழுதுபவர்கள், ‘பழி தீர்ப்பதற்கும் ஓர் எல்லை இருக்கின்றது. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலின் போரில் தங்களது பங்களிப்பைக் காட்ட வேண்டும். சமாதானம் செய்யவும், போரை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும். ஆனால் இந்த மக்கள் போரை நிறுத்துவதற்குப் பகரமாக அதை மூட்டுவதில் தீவிரமாக இருக்கின்றார்கள்’ என்று செய்தித்தாள்களில் எழுதியுள்ளார்கள்.

அமெரிக்காவில் நேற்று வெளியான செய்தி என்னவென்றால், வெளியுறவு துறையின் ஒரு மிகப்பெரிய அதிகாரி, இது எல்லையைக் கடந்து விட்டது பாலஸ்தீன அப்பாவிகள் மீது மிகப்பெரிய அநீதி நடக்கின்றது. பெரும் சக்திகளுக்கு அவர்களை கவனத்தில் வைக்க வேண்டியது அவசியமாகும் என்று கூறியவாறு ராஜினாமா செய்துள்ளார்.

ஆகையால் இந்த மக்களில் நல்லவர்களும் இருக்கின்றார்கள்தான்! இதேபோன்று சில மீடியாக்களில், சில நன்மையை விரும்பும் யூதர்களும் இவர்களுடைய உரிமை தொடர்பாக பேசுகிறார்கள். மேலும் அநீதிக்கு எதிராக பேசுகின்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அதிகாரி கூறியிருக்கின்றார்: ‘இவ்வாறு இந்த நாடுகள் தங்களுடைய நிலையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், இந்தப் போர் அந்த முழு பகுதியிலும் பரவிவிடும்.’ ஆனால் நான் புரிந்தது என்னவென்றால், உலகிலும் பரவி விடும். ஆகையால் அறிவுடன் செயல் பட வேண்டும். நான் முன்பே கூறியது போல், முஸ்லிம் நாடுகள் ஒன்றாக இணைந்து ஒரேபோன்று குரல் எழுப்ப வேண்டும். உலகில் 53, 54 முஸ்லிம் நாடுகள் இருக்கின்றது என்கின்றார்கள். அவர்கள் ஒரேபோன்று குரல் எழுப்பினால் இது மிகப்பெரிய சக்தியாகும்; இதனுடைய தாக்கமும் இருக்கும். இவ்வாறு இல்லை என்றால், ஆங்காங்கே குரல்கள் எழுப்புவதனால் எந்தப் பயனும் இருக்காது! உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு, இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர இந்த ஒரு வழிதான் உள்ளது.

ஆகையால் முஸ்லிம் நாடுகள் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக தங்களுடைய பங்களிப்பை முழுவதுமாக காண்பிப்பதற்கு முயற்சியை மேற்கொள்ளுங்கள். அல்லாஹுத்தஆலா இவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக! ஆனால் எவ்வாறிருப்பினும், நமக்கு துஆவின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹ் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவானாக! மேலும் அப்பாவிகளான அநீதி இழைக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவானாக. இன்னும் அவர்கள் மீது அநீதி ஏற்படாமல் இருக்கட்டுமாக. மேலும் எங்கெல்லாம் அநீதி நடக்கின்றதோ அங்கெல்லாம் அநீதி உலகத்தில் இருந்து முடிவுக்கு வரட்டுமாக. அல்லாஹ் தஆலா நமக்கு துஆவிற்கான பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)